இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 27.05.2026

# குதிரை வேக குதிரை பேர ஆட்சி!

**‘குதிரை வேக குதிரை பேர ஆட்சி இது’** என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருப்பதுதான் நூற்றுக்கு நூறு உண்மை ஆகும்.

**தனது நாற்காலியைத் தக்க வைப்பதற்காக அனைத்து கேவலமான முறைகளையும் பயன்படுத்தி வருகிறார் முதலமைச்சர் விஜய்.**

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை தமிழ்நாட்டு மக்கள் வழங்கவில்லை. தி.மு.க. எதிர்க்கட்சியாகச் செயல்படும் என்றும் ஆட்சி அமைக்கும் த.வெ.க.வுக்கு இடையூறாக இருக்காது என்றும் தொடக்கத்திலேயே தி.மு.க. தலைவர் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

தி.மு.க. கூட்டணியில் வென்ற காங்கிரஸ் கட்சி, உடனடியாக த.வெ.க. ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து விலகியது. தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள், ‘இன்னொரு தேர்தல் வரக்கூடாது’ என்பதால் ஆட்சியை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்தன. ஆனாலும், ‘கொள்கை அளவில் தி.மு.க. கூட்டணியில் தொடர்வதாகவும்’ அறிவித்தன. பின்னர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளன. இதன் மூலமாக பெரும்பான்மையை நிரூபிக்கும் வலிமையை விஜய் பெற்றார். அத்தோடு அமைதியாக அவர் இருந்திருக்க வேண்டும்.

இவை போதாது என்று அ.தி.மு.க.வை உடைக்கும் செயலை விஜய் செய்தார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களில் 25 பேரை தனியாக ஆக்கி அவர்களை தங்களது ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வாக்களிக்க வைத்தார். **‘அமைச்சர் பதவி தருகிறோம், வாரியத் தலைவர் பதவி தருகிறோம் என்று ஆசை வார்த்தை காட்டப்படுவதாக’** சட்டமன்றத்திலேயே எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி இருக்கிறார். இது அவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. எந்தக் கீழ்த்தரத்துக்கும் விஜய் கட்சி இறங்கும் என்பதை எடப்பாடி பழனிசாமி போட்டு உடைத்தார்.

**அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஒரு உறுப்பினரையும் தங்களுக்கு ஆதரவானவராக மாற்றினார்கள். அதில்தான் எத்தனை நாடகங்கள் நடந்தன?**

டி.டி.வி. தினகரன் தனது கட்சியின் ஒரு எம்.எல்.ஏ.வைக் காணோம் என்றும், எனது கையெழுத்தை அவர் போட்டுள்ளார் என்றும் ஆளுநரிடம் மனு தருகிறார். கிண்டி காவல் நிலையத்திலும் புகார் தருகிறார். ‘நான் போகவில்லை’ என்று அந்த எம்.எல்.ஏ.வே பேட்டி தருகிறார். பின்னர் அவரே விஜய் ஆதரவாளராக மாறுகிறார். அந்த எம்.எல்.ஏ.வை கட்சியை விட்டு நீக்கிவிட்டார் டி.டி.வி. தினகரன். அப்படியானால் தினகரன் கட்சி எம்.எல்.ஏ.வுக்கு தரப்பட்ட வாக்குறுதி என்ன?

**‘முதலமைச்சரைச் சந்திக்க முகத்தை மூடிக் கொண்டு சென்றது யார்?’** என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்க்கு நேராகக் கேள்வி கேட்டார் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த். சபையில் உட்கார்ந்து இருந்த முதலமைச்சர் விஜயால் பதில் சொல்ல முடியவில்லை.

**இப்படி ஒட்டுப்போட்ட கந்தல் துணியைப் போல ஒரு ஆட்சியை அமைத்து விட்டு, ஆட்சியை ஒழுங்காக நடத்தாமல் சட்டம் ஒழுங்கை சந்தி சிரிக்க விட்டு, மிகமிக ஏமாற்றத்தை வாக்களித்த மக்களுக்கு கொடுத்து வருகிறார் விஜய்.**

தினந்தோறும் கொலைகள், பாலியல் வன்முறைகள், நிர்வாகச் சீர்கேடுகள், மின்வெட்டுகள், அதிகார துஷ்பிரயோகங்கள். இவை தான் நாம் பார்க்கும் காட்சிகள் ஆகும். சமூக வலைதளங்களைத் திறந்தாலே இந்த ஆட்சி மீதான ஆக்ரோஷமான எதிர்ப்புக் குரல்கள்தான் அதிகம் ஒலிக்கிறது. இவை எதுவும் விஜய் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த முனையவில்லை. மாறாக ஆடிக் கொண்டிருக்கும் தனது நாற்காலியைச் சரி செய்வதிலேயே அவர்களது எல்லாக் கவனமும் இருக்கிறது. அ.தி.மு.க. சார்பில் வென்று, அ.தி.மு.க.வின் நிலைப்பாட்டுக்கு மாறாக த.வெ.க. ஆட்சியை ஆதரித்து வாக்களித்த மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி விலக வைக்கப்பட்டுள்ளார்கள். பதவி விலகலைக் கொடுத்த சில நிமிடங்களில் அவர்கள் த.வெ.க.வில் இணைந்துள்ளார்கள். எதற்காக அவர்கள் பதவி விலக வைக்கப்பட்டுள்ளார்கள்? குதிரை பேரத்தால் உருவான ஆட்சி என்று அனைத்து அரசியல் கட்சிகளும் சொன்னார்கள். அது சரி தான் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பதவி, வாரியத் தலைவர் பதவி என்று ஆசை வார்த்தை கூறி அழைத்து வரப்பட்டு, ஆட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வைக்கப்பட்டவர்கள் மீண்டும் அ.தி.மு.க.வில் இணைகிறார்கள். இன்னொரு தரப்பு தனது பதவியை விட்டு விலகி த.வெ.க.வில் இணைகிறது. இவர்கள் அனைவரும் சேர்ந்து ஆதரித்த ஆட்சி செல்லத்தக்க ஆட்சியா? நம்பிக்கைக்குரிய ஆட்சியா? ரகசிய பேரங்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி இது. இந்த ஆட்சி மக்களைப் பற்றி கவலைப்படாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே காலத்தைப் போக்கிக் கொள்ளும். இது மக்களுக்கான ஆட்சி அல்ல. அவர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆட்சியே ஆகும்.

**த.வெ.க. ஆட்சி அமைக்க ஆதரித்து வாக்களித்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்றுக் கொண்டு போய்விட்டார்கள். த.வெ.க.வை ஆட்சி அமைக்க ஆதரித்து வாக்களித்த 3 உறுப்பினர்கள் தங்களது பதவியை விட்டு விலகி இருக்கிறார்கள். இதன் மூலமாக ஆட்சிக்காக ஆதரவளித்த 8 வாக்குகள் குறைந்துள்ளது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் குறையவே செய்யும்.**

**சபாநாயகரின் அறைக்கு போய் பதவி விலகுகிறார்கள். அமைச்சர் அறைக்குச் சென்று கட்சியில் சேர்கிறார்கள். இதைவிடக் கேவலம் இருக்க முடியுமா?**

**விஜய் கூறிய தூய அரசியல் மடிந்து விட்டது. தொடக்கத்திலேயே முடிந்து விட்டது. குதிரை பேரங்கள் மூலமாக ஆட்சியைத் தக்க வைக்க நினைக்கும் விஜய்யை மக்களே விரட்டுவார்கள்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில், திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ் சந்தித்தார். அதுபோது கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் முடிந்ததும், அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் மாநில நிர்வாகிகள் சந்தித்து, கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கொடுத்தனர்.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி

# மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர்க் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, மே 27 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

நாளை (28.05.2025 - வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரை தலைமை வகிக்கிறார்.

மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதிஷ் குமார், டி.திலிப்குமார், செல்வம்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

ஆலோசனைக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் மற்றும் இளைஞரணி ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் சட்டப் பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, எ.வ.குமரன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாநில இளைஞரணி துணை செயலாளர் க.பிரபு கஜேந்திரன்,

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் சிவ ஜெயராஜ், அமைப்புசாரா தொமுச., ஏ.ஏ.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

செங்கம் நகர செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே. அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்

நிறைவாக மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறுகிறார்.



இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர். மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் இரண்டாவது முறையாக வெற்றி பெற்றதை தொடர்ந்து கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பொதுமக்களிடம் நன்றி கூறினார் .உடன் கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.



விளாத்திகுளம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் மற்றும் நடைபெற வேண்டிய திட்டப் பணிகள் மேலும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறும் சீரமைப்பு பணிகள் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன் விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, பேரூராட்சி மன்றமுன்னாள் துணைத் தலைவர் மாரியப்பன், மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம், வார்டு உறுப்பினர்கள் கலைச்செல்வி, செண்பகராஜ், வேல்ஈஸ்வரி அன்பில் நாராயணமூர்த்தி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.